2. தகவல் கோரல்.

(அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பெருந் தலைவர்கள் என அழைப்பதை மாற்றியமைப்பது குறித்து:

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள் தங்களைப் பெருந்தலைவர்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் பெரியார் என்றால் ஈ. வெ. ரா. அவர்களையும். பெருந்தலைவர் என்றால் காமராஜர் அவர்களையும், பேரறிஞர் என்றால் அண்ணா அவர்களையும், இதய தெய்வம் என்றால் புரட்சித் தலைவர் அவர்களையும் குறிக்கும் சொற்கள் ஆகும். ஆகவே பெருந்தலைவர் என்கிற சொற்களுக்குப் பதிலாக தகுந்த வேறு பெயரால் அவர்களைக் குறிப்பிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற விவரத்தை உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதப் போல நம்முடைய நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் பெருந்தலைவர் என்றால், அது மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களைத்தான் குறிக்கும்; பேரறிஞர் என்றால் அறிஞர் அண்ணா அவர்களைத்தான் குறிக்கும்; மூதறிஞர் என்றால் இராஜாஜி அவர்களைத்தான் குறிக்கும். ஆகவே ஒன்றியப் பெருந்தலைவர்களை ஒன்றியத் தலைவர்கள் என்று அழைக்கலாம் என்று புரட்சித் தலைவருடைய அனுமதி பெற்று அரசு உத்தரவிடும்.

(ஆ) ஓட்டல்களில் பண்டங்களின் விலையைக் குறைப்பது குறித்து.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த டாக்டர் நாவலர் அவர்கள் கடைசி நாளன்று அறிவிப்பு நிகழ்த்தும்போது ஓட்டல்களில்..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் என்ன காரணத்தினால் மகிழ்ச்சியோடு இருக்கிறீர்கள் என்று சொன்னால், நாம் எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்கலாம்.

திரு. கி. மனோகரன் : பண்டங்களின் விலை ஏற்றப்பட்டதால் அதற்கென்று போடப்பட்ட வரியை ரத்து செய்கிறேன், இனிமேல் பண்டங்களின் விலை ஏறாது என்று உறுதிமொழி அளித்ததைத் தொடர்ந்து மீண்டும் அந்த ஓட்டல் உடைமையாளர்கள் பண்டங்களுக்கு விலையைக் குறைக்காத காரணத்தினால் நேற்றைக்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் கேட்ட கேள்விக்கு உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நிச்சயமாக விலை குறைக்கப்படும், இல்லாவிட்டால் அவர்கள் தண்டனைக்கு உரியவர்கள் ஆவார்கள் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் அடம்பிடித்து விலையை

ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து மாண்புமிகு அமைச்சர் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு இம்மன்றத்தின் சார்பாக அரசின் கருத்தை நாம் வெளிப்படுத்தி இருக்கிறோம். அப்படி அவர்கள் இன்னும் விலைகளைக் குறைக்கவில்லை என்ற புகார்கள் இருக்குமானால் அதுபற்றி சட்டப்படி அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அவைகளைக் கட்டாயம் எடுக்கும்.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி நினைவூட்டினால் தகுந்தபடி நடவடிக்கை எடுப்பேன் என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. நான் குறிப்பிட்ட ஓட்டல்களை, நான் வாங்கி சாப்பிடும் ஓட்டல்களைப் பற்றித்தான் சொல்ல முடியும் அந்த ஓட்டல்களின் பெயர்களைத் தருகிறேன். அவர்கள் மேலும் மேலும் விலையை ஏற்றிக் கொண்டு போகிறார்கள் என்ற வேதனையான செய்தியை நான் அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் நீங்கள் கொஞ்சம் கடுமை காட்டுவது நல்லது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் உரிமையாளர்களுடைய சங்கத் தலைவர்கூட எல்லா பத்திரிக்கைகளிலும் கட்டம் கட்டி அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். அரசு இதற்காக விதித்த வரிகளை ரத்து செய்துவிட்டதன் காரணமாக ஏற்கெனவே இடையிலே ஹோட்டல் பண்டங்களின் விலையை ஏற்றியவர்கள் கட்டாயமாகப் பழைய விலைக்கே இறக்க வேண்டும் என்று அவரே வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோளை ஏற்று ஓட்டல் நடத்துபவர்கள் எல்லோரும் பழைய விலைக்கே கொண்டுவர வேண்டும். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அதைக் குறிப்பிட்டு ''அப்படி விலை குறைக்கப்படாமல் இருந்தால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். எல்லா ஓட்டல்களின் நிலைமையைப் பார்த்து அறிய முடியாது என்றாலும் கூட ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளைப் பார்த்து எங்காவது இப்படி ஏற்றியவர்கள் இறக்காமல் இருந்தால் அவர்கள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், எடுக்கப்படும் என்பதை அரசின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.